3

# கிறிஸ்து: மனுஷகுமாரன்

*இயேசுவை பிலாத்து விசாரித்தபின், சொன்னான், "இதோ, இந்த மனுஷன்!" நாமும் கூட, கிறிஸ்து இயேசுவை இதோ இந்த மனுஷன் என்று காணவேண்டும். இயேசு கிறிஸ்துவைக்குறித்து நாம் மூன்று கேள்விகளைக் கேட்க வேண்டும், மனுஷகுமாரனைப் பற்றி கேள்விகள் இவை: இயேசு கிறிஸ்து உண்மையாகவே மனுஷனாக இருந்தாரா; அதாவது, தேவனுடைய தெய்வீகம் நிறைந்த குமாரனாக இருந்து கொண்டே மனுஷீகமும் உள்ளவராக இருந்தாரா? அவர் மனுஷனாக இருந்திருந்தால், அவர் எப்படிப்பட்ட மனுஷனாக இருந்தார்? அவரது மனுஷீகம் நமக்கு என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது?*

## இயேசு ஒருமனுஷனாக இருந்தாரா?

**வசனங்களின் சாட்சியம்**

இயேசு தெய்வீகம் நிறைந்தவராயிருந்தாலும், அவர் உண்மையில் ஒரு மனுஷனாக, ஒரு உண்மையான மனுஷீகம் உள்ளவராகவும் இருந்தார். இயேசுவின் மனுஷீகத்திற்கு சாட்சி அளிக்கிற கீழ்வரும் வசனங்களை ஆராயுங்கள்:

யோவான் இயேசுவின் வரலாற்றை துவங்கி தனது வார்த்தைகளை உறுதிபடுத்தி, ''ஆதியிலே வார்த்தையிருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்று எழுதுகிறார் (யோவான் 1:1). பிறகு அவர் அத்துடன் சேர்த்து, "அந்த வார்த்தை மாமிசமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கேற்ற மகிமையாகவே இருந்தது" என்று எழுதினார் (யோவான் 1:14).

அவர் உலகத்திலே பிறப்பதற்கு முன்பாக, கிறிஸ்து இயேசு "தேவனுடைய ரூபமாயிருந்தார்'' என்றும் ஆகிலும் "தேவனுக்கு சமமாயிருப்பதை ஒரு கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை" என்றும் பவுல் குறிப்பிட்டார். ஆகையால், அவர் "தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷசாயலானார்" (பிலிப்பியர் 2:6, 7).

கலாத்தியர் 4:4 சொல்லுகிறது, ''காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்துக்கு கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்."

எபிரெயர் எழுத்தாளர் சொன்னார்,

> எப்படியெனில், பரிசுத்தஞ் செய்கிறவரும் பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள். இதினிமித்தம் அவர்களைச் சகோதரர்களென்று சொல்ல அவர்

*வெட்கப்படாமல். உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்து பாடுவேன் என்றும்; நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும்; இதோ, நானும் என் தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார்.*

*... ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார். ஆதலால், அவர் தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாக கைகொடுத்தார். அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது (எபிரெயர் 2:11-17).*

*பவுல் எழுதினார், ‘‘தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே, ... மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே’’ (1 தீமோத்தேயு 2:5).*

*இந்த அனைத்து ஆதாரங்களும் இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் மாத்திரமல்ல அவர் மனுஷகுமாரனுமானவர் என்று காட்டுகிறது. உண்மையில், இயேசு கிறிஸ்துவை நாம் “மனுஷகுமாரன்” என்று பேசும்போது, இயேசுவின் பிடித்தமான பதவிநியமனப் பெயரைப் பயன்படுத்துகிறோம். அவர் தம்மை ‘‘மனுஷகுமாரன்’’ என்று எண்பது முறைக்கு மேலாக சுவிசேஷங்களிலே குறிப்பிட்டுள்ளார்.*

***இயேசுவின் ஜீவிய சாட்சியம்***

*புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இயேசு ஒரு மனுஷன் என்பதை உறுதிப்படுத்தி எழுதியது மாத்திரமல்ல, ஆனால் சுவிசேஷங்களும் அவரது மனுஷீகத்துக்கு அவரது ஜீவியத்தை சாட்சியமாக குறிப்பிடுகிறது. நாம் அனுபவித்துக் கொண்டுள்ளவைகளையே இயேசுவும் அனுபவித்தார். மற்ற எல்லாரையும் போல, அவரும் ‘‘ஸ்திரீயினிடத்தில் பிறந்தார்’’ (கலாத்தியர் 4:4; காண்க லூக்கா 2). சிறுபிள்ளையாக இருக்கையில் அவர் தம்முடைய பெற்றோருக்கு கீழ்ப்படிந்திருந்தார் (லூக்கா 2:51). அவர் வளர்ந்து வரும்போது, “ஞானத்திலும் வளர்த்தியிலும் விருத்தியடைந்தார்” (லூக்கா 2:52).*

*இயேசு ஒரு தொழிலை கற்று அதை நடைமுறைப்படுத்தினார்: தமது தகப்பனாகிய யோசேப்பைப் போல (பூமிக்குரிய தகப்பன்), அவரும் ஒரு தச்சனானார் (மாற்கு 6:3). அவர் சோர்வடைந்தபோது, ஓய்வெடுத்தார் (யோவான் 4:6); அவர் பசியுற்று தாகமடைந்தபோது, அவர் புசித்தார் குடித்தார் (மத்தேயு 4:2; யோவான் 19:28).*

*இயேசுவுக்கு குறிப்பிடத்தக்க நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில் மரியாள்,*

*மார்த்தாள், லாசரு ஆகியோரும் அடங்குவர். லாசரு வியாதிப்பட்டபோது, அவனுடைய சகோதரிகள் அவருக்குச் சொல்லியனுப்பினார்கள், அதில், "ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்" என்று சொன்னார்கள் (யோவான் 11:3, 5). யோவான் தன்னை குறித்து "இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்" என்று சொன்னார் (யோவான் 21:20; யோவான் 13:23; 19:26யும் காண்க).*

*அவருடைய குடும்பம் இருந்தது. இயேசுவின் சொந்த ஊர்க்காரர்கள் அவரைக்குறித்துச் சொன்னார்கள் "இவன் தச்சன்அல்லவா? மரியாளின் குமாரன் அல்லவா? யாக்கோபு யோசே யூதா சீமோன் என்பவர்களுக்கு சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா?" என்றார்கள் (மாற்கு 6:3).*

*மனுஷனாக இருந்ததினால் இயேசு சோதிக்கப்பட்டார் (மத்தேயு 4:1-11; எபிரெயர் 2:18). அவர் கோபப்பட்டார் (மாற்கு 3:5). அவர் வருத்தத்தையும், அனுபவித்தார், அவர் அழுதார் (யோவான் 11:35).*

*அவ்வப்பொழுது, இயேசு பாடுகளைப்பட்டார் (1 பேதுரு 4:1). மற்ற மனுஷர்களைப் போலவே அவரும் மரித்தார் (மத்தேயு 27:50).*

*மற்ற எல்லா ஜனங்களையும்விட, இயேசு ஒரே ஒரு வழியில் மட்டுமே வித்தியாசப்பட்டு வாழ்ந்தார். "நம்மைப்போல அவர் எல்லாவற்றிலும் சோதிக்கப்பட்டாலும்," அவர் பாவம் செய்யவில்லை (எபிரெயர் 4:15).*

## இயேசு எப்படிப்பட்ட மனுஷனாக இருந்தார்?

*இயேசு சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஒரு மனுஷனாக இருந்தார். அவர் உண்மையில் மனுஷீகம் நிறைந்தவர்தான். அவர் எப்படிப்பட்ட மனுஷனாக இருந்தார்? ஒரு முறை சில கிரேக்கர்கள் பிலிப்புவிடத்தில் வந்து, "ஐயோ, இயேசுவைக் காணவிரும்புகிறோம்" என்றார்கள் (யோவான் 12:21). ஜனங்கள் இன்றைக்கும் இயேசுவைக் காணவிரும்புகிறார்கள். அவர்கள் அவரைப் பார்க்கும்போது, வேதவசனங்களை வாசிப்பதினால் அவர்கள் எதைப் பார்ப்பார்கள்? இயேசுவின் வார்த்தைகளும் கிரியைகளும் அவர் எப்படிப்பட்டவராக இருந்தார் என்பதை வெளிப்படுத்துகிறது.*

*அவர் வியாபாரம் செய்கிறவர்களை "சவுக்கை உண்டுபண்ணி" தேவாலயத்தை விட்டு வெளியேற்றினார் (யோவான் 2:13-17). கூடுதலாக, அவர் தச்சனாக கடினமாய் வேலை செய்தார். வெகு தொலைவுகள் அவர் நடந்தார், கஷ்டப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்தார் (காண்க மத்தேயு 8:20). மரிப்பதற்கு முன் அவர், கற்பனைக்கு எட்டாத உபத்திரவங்களை சகித்தார். அவர் ஒரு பலமிக்க மனுஷனாயிருந்தார்.*

*அவர் வியாதிப்பட்டவர்களை சுகமாக்கினார். பசியுள்ளவர்களை போஷித்தார். அவர் இரக்கமிக்கவராக இருந்தார்.*

*அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் நட்பு கொண்டார் (லூக்கா 15:1, 2) ஒரு விபச்சாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீயை மன்னித்தார் (யோவான் 8:1-11). அவர் மன்னித்திருந்த மற்றொரு பெண்ணின் மரியாதையுடன் கூடிய தொழுகையை ஏற்றுக்கொண்டார் (லூக்கா 7:36-50). அவர் அன்புமிகுந்த மனிதராக இருந்தார்.*

*அவரிடத்தில் கொண்டுவரப்பட்ட பிள்ளைகளை அவர் ஆசீர்வதித்தார்*

(மாற்கு 10:13-16). *அவர் மனதுருக்கமுள்ள மனுஷராக இருந்தார்.*

அவர் பரிசேயர்களை கடிந்து கொண்டு இயன்றவரை கடினவார்த்தைகளால் பேசினார் (மத்தேயு 23:13-33). நிகழ்வுகளைப் பொறுத்து, *அவர் கோபப்படும் மனுஷராகவும் இருந்தார்.*

அவர் தமது விரோதிகளை கேள்விகளை கேட்டு சிக்கல்களை உருவாக்கினார் (மத்தேயு 22:46). *அவர் புத்திக் கூர்மைமிக்கவரும் அறிவுநுட்பம் மிகுந்தவராயுமிருந்தார்.*

லாசரு குடும்பத்தாரோடும் சிநேகிதர்களோடும் அழுதார் (யோவான் 11:35). *அவர் இரக்கமும் பரிவும் உள்ளவராக இருந்த மனுஷனாக இருந்தார்.*

அவர் அப்போஸ்தலர்களின் கால்களைக் கழுவினார் (யோவான் 13:3-11). *அவர் தாழ்மையுள்ள மனுஷனாக இருந்தார்.*

அவரைச் சிலுவையில் அறையும்படி கலகக்கார கும்பல் அவரைக் கொண்டுபோக வந்தபோது, “நான் தான்” என்று சொன்னவுடனே “அவர்கள் பின்னிட்டு விழுந்தார்கள்” (யோவான் 18:5, 6). *அவர் வல்லமையுள்ளவரும் கட்டளையிடும் கெம்பீரமிக்க மனுஷனுமாயிருந்தார்.*

அவர் தம்மை தேவனுடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்தார், கெத்செமனே தோட்டத்தில் அவர் ஜெபித்த போது, “என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது” என்றார் (லூக்கா 22:42). எபிரெயர் 5:8, 9 சொல்லுகிறது, “அவர் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்” (பிலிப்பியர் 2:8யும் காண்க). *அவர் கீழ்ப்படிகிற சுபாவம் உள்ள மனுஷனாக இருந்தார்.*

இராஜ்யத்திலே யார் பெரியவனாயிருப்பான் என்ற தர்க்கம் சீஷர்களுக்குள்ளே எழும்பினபோது, இயேசு “மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்” என்று சொன்னார் (மாற்கு 10:45) அவருடைய வாழ்க்கை ஏதோ தாம் அனுபவிக்கும் வேடிக்கையானதாயிராமல், மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்வதும் உதவக்கூடியதாயுமிருந்தது - வாய்ப்புகள் இல்லாதபோதும், அவர் மிகுந்த சோர்வடைந்திருந்தபோதும், அவர் செய்யவேண்டிய வேறே காரியங்கள் நிறையவே இருந்தபோதும், மற்றவர்களுக்கு உதவினார். *மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவே வாழ்ந்த மனிதர் அவர்.*

சிலுவையிலே, அவர் தம்மைக் குறித்து எண்ணாமல், மற்றவர்கள் மீது அவருடைய கவனம் இருந்தது. தமக்கு பக்கத்தில் இருந்த கள்ளனைப் பார்த்து, “இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசில் இருப்பாய்” என்று சொன்னார் (லூக்கா 23:43). அவர் தம்முடைய தாயாரிடத்தில், யோவானைக் குறித்து, “ஸ்திரீயே, அதோ, உன்னுடைய குமாரன்!” என்றார், யோவானிடத்தில், தமது தாயாரைக் குறித்து, “அதோ உன் தாய்!” என்றார் (யோவான் 19:26, 27). தம்மை சிலுவையில் அறைந்தவர்களைக் குறித்து, அவர், “பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்” என்றார் (லூக்கா 23:34). *அவர் மிகுந்த சிந்தனைவாதியும், சுயநலமற்றவருமான ஒரு மனுஷனாக இருந்தார்.*

சிலுவையிலே அவர் தமது நோக்கத்தை நிறைவேற்றினார் அவர் அனைத்து மனிதவர்க்கத்தின் பாவமன்னிப்பிற்காக மரித்தார், எனவே அவர் சத்தமாய், “எல்லாம் முடிந்தது!” என்று சொன்னார் (யோவான் 19:30). *தாம்*

*என்ன செய்யும்படி வந்தாரோ அதை நிறைவேற்றிக் காட்டிய வெற்றியுள்ள மனுஷன் அவர்.*

பேதுரு அவரை மறுதலித்தபோதும், அவர் பேதுருவை மறுபடியும் ஏற்றுக்கொண்டார் (யோவான் 21:15-19). *அவர் மன்னிக்கிற மனுஷராயிருந்தார்.*

பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே தமக்கு "போஜனம்" என்று அவர் சொன்னார் (யோவான் 4:34; மேலும் காண்க யோவான் 6:38). மேலும் அவர் எல்லாவற்றிலும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினார். நம்மைப் போலவே அவர் எல்லாவற்றிலும் சோதிக்கப்பட்டாலும், அவர் பாவமற்றவராக வாழ்ந்தார் (எபிரெயர் 4:15). அவரை விரோதித்தவர்கள் கூட அவரில் எந்த குற்றத்தையும் காணவில்லை. அவர் பெலமுள்ள ஒரு ஆண்மகனாக இருந்த போதிலும், அவர் "நல்ல வயது பையன்களுடன்" போய் பானங்கள் அல்லது மதுபானம் அருந்தும் பாருக்குபோய், கொஞ்சம் குடித்து, அசிங்கமான வேடிக்கைப் பேச்சுகளைப்பேசி சிரித்து, வேறு முக்கியமான காரியம் எதுவுமில்லை என்பதற்காக சபை ஆராதனைக்கும்போவது போன்ற வகையான மனுஷனாக இருக்கவில்லை. *வேறு வார்த்தையில் சொல்வோமானால் அவர் ஒரு நீதியுள்ள மனுஷனாக இருந்தார்.*

ஆகையால், இயேசுவை நாம் பார்க்கும்போது. நாம் என்னத்தைப் பார்க்கிறோம்? மற்ற எல்லாவற்றோடுங்கூட, நாம் பலமிக்க, நீதியுள்ள, இரக்ககுணமுள்ள, சுயநலமற்ற, அன்பு நிறைந்த மனுஷனாகக் காணுகிறோம். இயேசு எப்படிப்பட்ட மனுஷன் என்பதைக் குறித்து அடிக்கடி தவறான கருத்தை ஜனங்கள் பெற்றுக்கொள்கிறார்கள். சுவிசேஷத்தில் அவரைப் பற்றிச் சொல்லப்படுகிற அனைத்து தகுதியாம்சங்களும் குணாதிசயங்களும் உண்டு என்பதை உறுதிப்படுத்திக் கொள்வோமாக.

## அவருடைய மனுஷீகம் நமக்கு என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது?

**நாம் அவரை அன்புகூர வேண்டும்**

இயேசு எப்படிப்பட்டவர் என்பதை உணர்ந்து அவரை அன்புகூரச்செய்ய வேண்டும். M. நார்வெல் யெங் என்பவர் இந்தக் கருத்தை மிகவும் அழகாக கவிதை வடிவில் "நான் அவரில் அன்புகூருகிறேன், நீங்கள் இல்லையா?" என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார்.

*நான் மனுஷீகம் நிறைந்தவராய் தமது சீஷர்களுக்கு செல்லப் பெயரிட்டு அழைத்தவரை அன்புகூருகிறேன்,*
*வித்தியாசப்பட்ட நிலை கொண்டிருந்த சீமோன் கல்லுக்கொப்பான உறுதி வாய்ந்தவனாக மாறியதைக் கண்டார்.*

*திரளான ஜனங்கள் மீது மனதுருக்கம் கொண்ட மனுஷனை நான் அன்புகூருகிறேன்,*
*அவர் அவர்களை பசுமையான புல்வெளியின் மேல் அமர்ந்து ஓய்வெடுத்து அற்புதமான உணவை உண்ண உதவியவர்.*

அந்த கவிதை இயேசுவின் புரிந்து கொள்ளுதலையும் கண்ணீரையும், நீதியின் கோபத்தையும், தாழ்மையான சுபாவத்தையும் பேசுகிறது. மன்னிக்கும் கிறிஸ்து என மனதில் பதிக்கும் உணர்வையும் பயத்தையும் வேதனையையும் போக்கியவர் எனும் முடிவுக் கருத்துக்களைச் சொல்லி கவிதை நிறைவுறுகிறது:

> தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் வெற்றிசிறந்த மன்னனை நான் நேசிக்கிறேன். வந்து தமது மகிமையைப் பகிர்ந்துகொள்ள அவர் தமது அழைப்பை உங்களுக்கும் எனக்கும் கொடுக்கிறார்.
>
> நான் அவரில் அன்புகூருகிறேன், நீங்கள் இல்லையா?[1]

### நாம் அவரைப்போல் இருக்க ஆவல் உள்ளவர்களாயிருக்க வேண்டும்

இயேசுவின் சீஷர்கள் அவரைப்போல் இருக்க விரும்புவார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம், நமது குருவைப்போல் இருப்பதும் அவரைப் பின்பற்றுவதும் அவசியம் என்று வேதம் போதிக்கிறது. பேதுரு, "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைப் பின் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்" என்று எழுதினார் (1 பேதுரு 2:21). பவுல், "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள்" என்றார் (1 கொரிந்தியர் 11:1).

### அவர் நம்மை புரிந்து கொள்கிறார் என்பதை நாம் உணர வேண்டும்

இயேசு ஒரு மனுஷனாக இருந்தார் என்பதையும் மனித அனுபவம் அனைத்தும் அவர் அனுபவித்து நமது பிரச்சனைகளை அவர் புரிந்து கொள்கிறார் என்பதால் பாராட்ட வேண்டும். எபிரேயர் எழுத்தாளர் பின்வரும் வார்த்தைகளால் அதை விளக்கப்படுத்துகிறார்:

> வானங்களின் வழியாய் பரலோகத்திற்கு ஏறிப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக் கடவோம். நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கு இருக்கிறார். ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (எபிரெயர் 4:14-16).

இயேசு கிறிஸ்து "நம்மைப் போலவே எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டார்," எனவே நமது பெலவீனங்களை அறிந்து நம்மோடு கூட பரிதபிக்கக் கூடியவராய் இருக்கிறார்!

இயேசுவாகிய மனிதரிடத்தில் நாம் எவ்வளவு அருகில் உணர முடியும்? எவ்வளவு அருகாமையில் அவர் நம்மை உணர முடியும்? எபிரேயர் 4:15ல் சொல்லப்பட்டபடி அவர் நம்மை அறிந்து கொள்கிறார் என்பது மாபெரும்

*செய்தி.*

*கடமைக்கும் ஆசைக்கும் இடையிலே நீங்கள் எப்போதாவது அமைதிகுலைவை சந்தித்துள்ளீர்களா? இயேசுவுக்கு அந்த உணர்வு கெத்செமனே தோட்டத்திலே இருந்தது. நீங்கள் எப்பொழுதாகிலும் எதிரிகளைச் சந்தித்துள்ளீர்களா? உங்கள் நண்பர்கள் தங்கள் புறமுதுகுகளை உங்களுக்குக் காட்டி, உங்களுக்கு ஏமாற்றங் கொடுத்ததுண்டா? அல்லது உங்களைக் காட்டிக் கொடுத்ததுண்டா? நீங்கள் மிகுந்த பசியோடும் தாகத்தோடும் தத்தளித்து எதைக் கொண்டாகிலும் திருப்திபட்டுக் கொள்ள ஏங்கியதுண்டா? நீங்கள் உபத்திரவப்பட்டு சோர்ந்து போனதுண்டா? நீங்கள் ஏமாற்றப்பட்டு கைவிடப்பட்டு அல்லது தவறாக நடத்தப்பட்டதுண்டா? நீங்கள் சில நேரங்களில் பிசாசினாலே சோதிக்கப்பட்டதுண்டா? இந்த எல்லா அனுபவங்களும் இயேசுவுக்குத் தெரியும்.*

*அவைகளெல்லாவற்றிற்கும் அப்பால், இயேசு ஒரு தச்சனாக இருந்தார். ஒரு தொழிலைப் பற்றிக் கொள்வதில் உள்ள சவால்களை அவர் நன்கு அறிந்திருந்தார். குறை சொல்லி முறுமுறுக்கும் வாடிக்கையாளர்களை கொண்டுள்ளீர்களா? உங்கள் வேலையை சரியாக செய்து முடிப்பதில் உங்களுக்கு கஷ்டங்கள் இருக்கிறதா, நீங்கள் பொருட்கள் வாங்குகிற தொகைகளை சரியாக கட்டவும், அல்லது உங்கள் வேலைக்கான சம்பளத்தொகையை உங்கள் வாடிக்கையாளர் உங்களுக்கு சரியாகக் கொடுக்கிறார்களா? இதே விதமான அனுபவங்கள் இயேசுவுக்கு இருந்தன!*

*நாம் எவைகளை சகித்துக் கொண்டிருந்தாலும் இயேசு அதை புரிந்துகொண்டு பரிதபிக்கிறார். நாம் புண்பட்டால், இயேசு நம்முடைய வலிகளை நம்மோடு உணருகிறார். இயேசு நம்முடைய இரட்சகராகிய அவர் நம்மை நேசிக்கும் நண்பராக இரக்கம் காட்டும் பரிந்துரையாளராக இருக்கிறார்!*

***நாம் அவரை பின்பற்றிப்போக விரும்ப வேண்டும்***

*இயேசுவில் அன்புகூர்வது, நாம் அவரைப் பின்பற்றவும், அவருடைய சீஷர்களாகவும் ஆக நம்மை ஊக்குவிக்க வேண்டும். ஜனங்கள் எப்போதும் செயலாக்க காரணியையும் முன்வழிகாட்டும் நபரையும் எதிர்நோக்கியுள்ளனர். இயேசு கிறிஸ்துவுக்கு மேல் தகுதிபெற்ற நமது முன் வழிகாட்டி யாரும் இருக்கிறார்களா? இந்த தகுதியாம்களில் சிறந்து இருப்பவரை நாம் தாராளமாக பின்பற்ற முடியும்: அவர் பலசாலியாக இருந்தார், ஆயினும் இளகியமனம் அவரிடத்தில் இருந்தது; உறுதியான மனம், இருந்தும் இரக்க குணமுள்ளவராயிருந்தார்; வலிமை மிக்கவர், இருந்தும் கீழ்ப்படிதல் அவரிடத்தில் இருந்தது; வெற்றியுள்ளவராக, இருந்தும் தாழ்மை யானவராயிருந்தார். நம்முடைய கர்த்தர் முற்றிலும் சுய நலமற்றவராயிருந்தார், முழுமையான மன்னிக்கும் சுபாவம் பெற்றவர், முற்றிலும் அன்பும் நீதியும் மிகுந்தவர். அவர் யார் அவர் எப்படியிருந்தார் என்பதை அறிந்து, “என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள்” என்று அவர் விடுத்த அறைகூவலை நாம் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும் (மத்தேயு 4:19).*

## *முடிவுரை*

*பாவமில்லாமல் இருந்ததைத்தவிர, மற்றபடி இயேசு எல்லாவற்றிலும்,*

*நம்மைப்போல இருந்த ஒரு மனுஷர்தான். நாம் இயேசுவின் கீழ்ப்படிதலை முன்மாதிரியாகப் பின்பற்ற வேண்டும். அவர், "என்னுடைய சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்றார். உங்கள் சொந்த சித்தத்தை மறுதலியுங்கள், அதற்குப் பதிலாக தேவனுடைய சித்தத்திற்கு ஈர்க்கப்படுங்கள். நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது, நீங்கள் பாவமன்னிப்பைப் பெற நீங்கள் கீழ்ப்படியும்படியாக தேவன் கட்டளைகளைக் கொடுத்திருக்கிறார். அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியுங்கள், உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். அன்பும், இரக்கமுமுள்ள இயேசு இரக்கங்காட்டி உங்களை புரிந்து கொள்ளும் நண்பராயிருக்கிறார், உங்கள் எஞ்சிய நாள் வாழ்வில் அவர் உங்களின் பரிந்துரையாளராராக இருப்பார்!*

---

குறிப்பு

[1]M. Norvel Young, "I Love Him, Don't You?" *20th Century Christian* 41 (October 1978): 21.